astern University, Sri La ... 2007

# EASTERN UNIVERSITY, SRI LANKA
## Faculty of Commerce and Management

## PART-11 EXAMINAITON IN COMMERCE/BUSINESS ADMINISTRATION-1998/99 (Nov/Dec-2000)

## COM 304 Advanced Financial Accounting – 11

நேரம் : 03 மணித்தியலங்கள்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

---

01. (i) "கணக்கீட்டு விகிதப் பகுப்பாய்வானது நிதிக்கூற்றுக்களைவிட நிதித் தீர்மானம் செய்தலுக்குக் கூடுதலான தகவல்களை வழங்கக்கூடியதும் பயன் நிறைந்ததுமாகும்."

(அ) விகிதப்பகுப்பாய்வின் நன்மைகளைப் பட்டியலிலிடுக.

(01 புள்ளி)

(ஆ) கணக்கீட்டு விகிதங்களை உபயோகித்து ஒரு வியாபார நிறுவனத்தின் எவ்வகையான விடயங்களை நீங்கள் அளவீடு செய்வீர்கள்?

(01 புள்ளி)

(இ) நீங்கள் மேலே (ஆ) இல் குறிப்பிட்ட விடயங்களை அளவீடு செய்வதற்குப் பயனுள்ளதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும் வகையில் கணக்கீட்டு விகிதங்களை எவ்வாறு நீங்கள் வகைப்படுத்துவீர்கள்?

(01 புள்ளி)

(ஈ) விகிதப்பகுப்பாய்வை உபயோகித்து நிறுவனங்களுக்கிடையிலான ஒப்பீட்டை மேற்கொள்வதற்கு திருப்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள் யாவை?

(01 புள்ளி)

(உ) நிதிக்கூற்றுப் பகுப்பாய்வை மேற்கொள்வதற்கான ஏனைய முறைகள் யாவை?

(01 புள்ளி)

(மொத்தம் 05 புள்ளிகள்)

(ii) கோல்ட் ஸ்ரார் கம்பனியின் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் உங்களுக்குத் தரப்படுகின்றன.

பின்வரும் திகதிகளில் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக்கணக்குகள்.

| | 30.09.1999 | | 30.09.2000 | |
|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| விற்பனைகள் | | 3,000 | | 4,000 |
| கழி: விற்பனைக்கிரயம்: | | | | |
| ஆரம்ப இருப்பு | 300 | | 400 | |
| கொள்வனவுகள் | 2,350 | | 3,200 | |
| | 2,650 | | 3,600 | |
| இறுதி இருப்பு | (400) | 2,250 | (600) | 3,000 |
| மொத்தலாபம் | | 750 | | 1,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| கழி: செயற்பாட்டுச் செலவுகள்: | | | | |
| நிர்வாகம் | 125 | | 180 | |
| விற்பனை விநியோகம் | 100 | | 230 | |
| நிதி | 75 | 300 | 90 | 500 |
| வரிக்கு முன்னரான தேறியலாபம் | | 450 | | 500 |
| கழி : வரி | | 90 | | 100 |
| வரிக்குப் பின்னரான தேறியலாபம் | | 360 | | 400 |
| கழி : பகிர்வுகள்:- | | | | |
| பொது ஒதுக்கம் | 100 | | 100 | |
| பங்கிலாபம்: முன்னுரிமை | 20 | | 15 | |
| சாதாரணம் | 100 | 220 | 125 | 240 |
| | | 140 | | 160 |
| கூட்டு: இலாபநட்டக்கணக்கு மீதி மு/கொ/வ | | 300 | | 440 |
| இலாபநட்டக்கணக்கு மீதி மு/கொ/வ | | 440 | | 600 |

பின்வரும் திகதிகளில் உள்ளவாறான ஐந்தொகைகள்

| | 30.09.1999 | | 30.09.2000 | |
|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| நிலையான சொத்துக்கள் (புத்தகப் பெறுமதியில்) | | | | |
| காணி கட்டிடம் | | 2,100 | | 2,000 |
| தளபாடம், பொருத்திகள் | | 400 | | 360 |
| மோட்டார் வாகனம் | | 1000 | | 1,640 |
| | | 3,500 | | 4,000 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | |
| இருப்புக்கள் | 400 | | 600 | |
| வியாபாரக் கடன்பட்டோர் | 1,200 | | 1,500 | |
| காசும் வங்கியும் | 900 | | 310 | |
| | 2,500 | | 2,410 | |
| கழி: நடைமுறைப்பொறுப்புகள் | | | | |
| வியாபாரக்கடன் கொடுத்தோர் | 1,100 | | 1,160 | |
| வரி சென்மதி | 90 | | 100 | |
| பங்கிலாபம் சென்மதி | 110 | | 140 | |
| | (1,300) | 1,200 | (1,400) | 1,010 |
| | | 4,700 | | 5,010 |
| கழி: நீண்டகாலப் பொறுப்புக்கள் | | | | |
| 15% தொகுதிக்கடன்கள் | | 500 | | 600 |
| | | 4,200 | | 4,410 |
| பங்கு மூலதனம் | | | | |
| ஒவ்வொன்றும் ரூ.10 ஆன சாதாரண பங்குகள் | | 3,000 | | 3,000 |
| ஒவ்வொன்றும் ரூ.10 ஆன 10% முன்னுரிமைப்பங்குகள் | | 200 | | 150 |
| | | 3,200 | | 3,150 |
| ஒதுக்கங்கள் | | | | |
| பங்கு வட்டம் | 300 | | 300 | |
| பொது ஒதுக்கம் | 260 | | 360 | |
| இலாப நட்டக் கணக்கு மீதி | 440 | 1,000 | 600 | 1,260 |
| | | 4,200 | | 4,410 |

மேலதிக தகவல்கள்:

(i) சாதாரண பங்குகளின் சந்தை விலை

30.09.1999 இல் - ரூ.15 பங்கொன்று
30.09.2000 இல் - ரூ.18 பங்கொன்று

(ii) வியாபார செயற்பாட்டுக்காலம் - 360 நாட்கள்
(iii) அனைத்து கொள்வனவுகளும் விற்பனைகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவைகளாகும்.

**வேண்டப்படுவது:**

கோல்ட் ஸ்ரார் கம்பனியில் 30.09.1999 இலும் 30.09.2000 இலும் முடிவுற்ற இரு நிதியாண்டுக்கிடையிலும் கணக்கீட்டு விகிதப்பகுப்பாய்வு மூலம் ஒரு முழுமையான நிதிக்கூற்றுப்பகுப்பாய்வினையும் வியாக்கியானத்தையும் மேற்கொள்க.

(20 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

02. (i) "காசுப் பாய்ச்சல் கூற்று ஆனது ஏனைய மரபுரீதியான நிதிக்கூற்றுக்களைவிட நிதித்தீர்மானம் செய்வதற்கு பாவனையாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும்."

(அ) காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிப்பதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் யாவை?

(1 புள்ளி)

(ஆ) இலங்கையில் ஏன் நிதிப்பாய்ச்சல் கூற்றுக்குப் பதிலாக காசுப்பாய்ச்சல கூற்று பாவனையிலுள்ளது?

(1 புள்ளி)

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் (S.L.A.S.9) 9 இற்கு இணங்க காசும் காசுக்குச் சமமானவையும் எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளன?

(1 புள்ளி)

(ஈ) வெவ்வேறு நடவடிக்கைகளிலிருந்து எழும் காசும் பாய்ச்சல்களை எவ்வாறு நீங்கள் வகைப்படுத்துவீர்கள்?

(1 புள்ளி)
(மொத்தம் 5 புள்ளிகள்)

stern University, Sr

(ii) பின்வரும் திகதிகளில் உள்ளவாறான கிறிஸ்டல் கம்பனியின் ஐந்தொகைகள் உங்களுக்கு கீழே தரப்படுகின்றன.

| | 30.09.1999 | | 30.09.2000 | |
|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| நிலையான சொத்துக்கள் | | | | |
| காணி,கட்டடம்(கிரயத்தில்) | 500 | | 500 | |
| கழி:திரண்ட பெறுமானத்தேய்வு | (100) | 400 | (125) | 375 |
| தளபாடம்,பொருத்திகள் (கிரயத்தில்) | 200 | | 200 | |
| ஆண்டுக்காலத்தில் சேர்ப்பனவு(கிரயம்) | — | | 50 | |
| | 200 | | 250 | |
| கழி: திரண்ட பெறுமானத் தேய்வு | (80) | 120 | (100) | 150 |
| மோட்டார் வாகனங்கள்(கிரயம்) | 300 | | 300 | |
| கழி : ஆண்டுக்காலத்தில் விற்பனவு(கிரயம்) | — | | (100) | |
| | 300 | | 200 | |
| கழி: திரண்ட பெறுமானத் தேய்வு | (120) | 180 | (100) | 100 |
| | | 700 | | 625 |
| முதலீடுகள் | 100 | | 150 | |
| நன்மதிப்பு | 100 | 200 | 75 | 225 |
| | | 900 | | 850 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | |
| இருப்புக்கள் | 130 | | 150 | |
| வியாபாரக் கடன்பட்டோர் | 220 | | 250 | |
| 3 மாத திறைசேரி உண்டியல்களில் முதலீடு | 100 | | 100 | |
| முன்செலுத்திய செயற்பாட்டுச் செலவுகள் | 20 | | 10 | |
| காசும் வங்கியும் | 130 | | 90 | |
| | 600 | | 600 | |
| கழி: நடைமுறைப் பொறுப்புக்கள் | | | | |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 240 | | 210 | |
| பங்கிலாபம் சென்மதி | 120 | | 100 | |
| வரி சென்மதி | 110 | | 120 | |
| அட்டுறு செயற்பாட்டுச் செலவுகள் | 30 | | 20 | |
| | (500) | 100 | (450) | 150 |
| | | 1000 | | 1000 |
| கழி: நீண்டகாலப்பொறுப்புக்கள் | | | | |
| 10% தொகுதிக் கடன்கள் | 200 | | 150 | |
| 20% வங்கிக்கடன்கள் | 100 | (300) | 120 | (270) |
| | | 700 | | 730 |
| பங்கு மூலதனம் | | | | |
| ஒவ்வொன்றும் ரூ.10 வான சாதாரண பங்குகள் | | 400 | | 450 |
| ஓதுக்கங்கள் | | | | |
| பங்கு வட்டம் | 100 | | 125 | |
| பொது ஒதுக்கம் | 70 | | 80 | |
| இலாப நட்டக் கணக்கு | 130 | 300 | 75 | 280 |
| | | 700 | | 730 |

astern University, Sri Lan

மேலதிகத் தகவல்கள்:-

(i) 30.09.2000 இல் முடிவுற்ற ஆண்டுக்கான விற்பனைகளும் விற்பனைக் கிரயங்களும் முறையே ரூ 2,000,000 வும் ரூ. 1,300,000 வும் ஆகும்

(ii) 5 ஆண்டுகளுக்கு முன்னர் ரூ.100,000 வுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்று விற்பனைத் திகதியில் ரூ. 50,000 பெறுமதியிடப்பட்டு 30.09.2000 இல் முடிவுற்ற ஆண்டு காலத்தில் ரூ.70,000 விலையில் காசுக்கு விற்கப்பட்டது.

(iii) நன்மதிப்பில் ஐந்திலொரு பங்கு 30.09.2000 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலாபநட்டக் கணக்கிற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டது.

(iv) 31.03.2000 இல் 10% தொகுதிக்கடன்களில் ஒரு பகுதி முகவிலையில் மீட்கப்பட்டன.

(v) 20% வங்கிக்கடன்களில் ரூ.20,000 வான கடன்கள் 31.03.2000 இல் பெறப்பட்டவையாகும்.

(vi) 30.09.2000 இல் முடிவுற்ற ஆண்டுக்காலத்தில் ஒவ்வொன்றும் ரூ.10 பெறுமதியான 5000 சாதாரண பங்குகள் பங்கொன்று ரூ.15 விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன.

(vii) 30.09.2000 இல் முடிவுற்ற ஆண்டுக்கான பிரேரித்த பங்கிலாபமும் வரியேற்பாடும் முறையே ரூ.100,000 வும் ரூ.120,000 வும் ஆகும்.

வேண்டப்படுவது:-

(i) கிறிஸ்டல் கம்பனியின் 30.09.2000 இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று ஒன்றினை, செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் எழும் காசுப் பாய்ச்சல்களை நேர்முறையில் அறிக்கையிட்டுத் தயாரிக்குக.

(ii) செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் எழும் காசுப் பாய்ச்சல்களை நேரில் முறையில் அறிக்கையிட்டுக் காட்டுக.

(20 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

03. (i) வரலாற்றுக்கிரய அடிப்படையிலமைந்த நிதிக்கணக்கீட்டு முறைமையின் வரையறைகள் யாவை?

(04 புள்ளிகள்)

(ii) எமரல் கம்பனியின் வரலாற்றுக்கிரய அடிப்படையிலமைந்த நிதிக்கூற்றுக்கள் பின்வருமாறு.

31.12.1999 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக் கணக்கு.

| | ரூ.000 | ரூ.000 |
|---|---|---|
| விற்பனைகள் | | 1,050 |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 125 | |
| கொள்வனவுகள் | 675 | |
| | 800 | |
| இறுதியிருப்பு | (115) | 685 |
| மொத்தலாபம் | | 365 |
| கழி : செயற்பாட்டுச் செலவுகள்:- | | (165) |
| வரிக்கு முன்னரான தேறிய லாபம் | | 200 |
| கழி : வரி | | (75) |
| வரிக்கு பின்னரான தேறிய லாபம் | | 125 |
| கழி : பங்கிலாபம் | | 70 |
| | | 55 |
| இலாப நட்டக்கணக்கு மீதி மு.கொ.வ | | 245 |
| இலாப நட்டக்கணக்கு மீதி மு.கொ.செ | | 300 |

பின்வரும் திகதிகளில் உள்ளவாறான ஐந்தொகை

| | 31.12.1998 | | 31.12.1999 | |
|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| நிலையான சொத்துக்கள்- | | | | |
| காணி,கட்டடம்(கிரயத்தில்) | 400 | | 400 | |
| கழி : திரண்ட பெறுமானத் தேய்வு | (100) | 300 | (120) | 280 |
| தளபாடம்,பொருத்திகள்(கிரயத்தில்) | 150 | | 150 | |
| கழி : திரண்ட பெறுமானத் தேய்வு | (60) | 90 | (75) | 75 |
| மோட்டார் வாகனங்கள்(கிரயத்தில்) | 300 | | 400 | |
| கழி : திரண்ட பெறுமானத் தேய்வு | (120) | 180 | (200) | 200 |
| | | 570 | | 555 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | |
| இருப்புக்கள் | 125 | | 115 | |
| வியாபாரக் கடன்பட்டோர் | 112 | | 190 | |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 18 | | 24 | |
| வருமதியுண்டியல்கள் | 85 | | 86 | |
| வங்கி மீதி | 20 | | 30 | |
| | 360 | | 445 | |
| கழி : நடைமுறைப் பொறுப்புக்கள் | | | | |
| வியாபாரக் கடன் கொடுத்தோர் | 73 | | 68 | |
| வரி சென்மதி | 60 | | 75 | |
| பங்கிலாபம் சென்மதி | 90 | | 70 | |
| செயற்பாட்டுச் செலவுகள் சென்மதி | 12 | | 17 | |
| | (235) | 125 | (250) | 195 |
| | | 695 | | 750 |

...2001
astern University, Sri Lan...

| | | | | |
|---|---|---|---|---|
| பங்கு மூலதனம் | | | | |
| ஓவ்வொன்றும் ரூ.10 வான சாதாரண பங்குகள் | | 300 | | 300 |
| ஓதுக்கங்கள் | | | | |
| பங்கு வட்டம் | 150 | | 150 | |
| இலாப நட்டக்கணக்கு | 245 | 395 | 300 | 450 |
| | | 695 | | 750 |

மேலதிகத் தகவல்கள் :-

(அ) வரலாற்றுக் கிரயத்திலும் நடைமுறைக் கிரயத்தில் நிலையான சொத்துக்களுக்கு நேர்கோட்டு முறையில் பின்வருமாறு பெறுமானத் தேய்விடப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| காணி, கட்டடம் | - | 5% ஆண்டுக்கு |
| தளபாடம், பொருத்திகள் | - | 10% ஆண்டுக்கு |
| மோட்டார் வாகனங்கள் | - | 20% ஆண்டுக்கு |

31.12.1999 இல் முடிவுற்ற ஆண்டுக் காலத்தில் ரூ.100,000 கொள்விலையான மோட்டார் வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டது. கொள்வனவு செய்த ஆண்டில் அதற்கு 20% ஆண்டுப் பெறுமானத் தேய்விடப்பட்டது. வியாபாரம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து வேறு ஏதேனும் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படவோ அல்லது விற்பனை செய்யப்படவோ இல்லை.

நிலையான சொத்துக்களுக்குப் பிரயோகிக்கத்தக்க பொருத்தமான விலைச் சுட்டெண்கள் பின்வருமாறு.

| | காணி,கட்டடம் | தளபாடம், பொருத்து | மோட்டார் வாகனங்கள் |
|---|---|---|---|
| 1993(நடுவாண்டு) | 120 | - | - |
| 1995(நடுவாண்டு) | - | 100 | 125 |
| 1999(நடுவாண்டு) | - | - | 225 |
| 1999(ஆண்டிறுதி) | 240 | 150 | 250 |

(ஆ) இருப்புக்களில் 3 மாதகால சராசரி விற்பனைக்கான பொருட்கள் உள்ளன.

இருப்புக்களுக்கான பொருத்தமான விலைச் சுட்டெண்கள் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| நடுமாதம் | 1998 | ஒக்டோபர் | 220.0 |
| | | நவம்பர் | 222.5 |
| | | டிசெம்பர் | 225.0 |
| நடுமாதம் | 1999 | ஒக்டோபர் | 267.5 |
| | | நவம்பர் | 270.0 |
| | | டிசெம்பர் | 272.5 |
| | 2000 | ஜனவரி | 275.0 |
| 1999 இற்கான சராசரி | | | 250.0 |